-5-1991

# இராணுவத்தைஎதிர்த்து பெண் புலிகள் கடும் சமர்

(கொழும்பு)
வவுனியாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரை முன்னேறவிடாது பெண் புலிகள் முன்னணியில் நின்று போராடிவருவதாக கொழும்பில் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
பெண் புலிகளின் விடாப்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 25 ஷவ்வால் 22 இதழ்: 87

யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-5-1991

## வேப்பங்குளத்தில் மீண்டும் ஆயுதங்கள் மீட்பு

[மன்னார்]
மன்னார் மாவட்டத்திலுள்ள வேப்பங்குளம்பகுதியில்கடந்த ஏப்பிரல் 30 ம் திகதிபுலிகளுக்கும் ராணுவத்துக்குமிடையில் சண்டை நடைபெற்ற இடத்தில் மேலும் பல ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர், ஊழியர் வெளியேற்றம்

[பண்டத்தரிப்பு]
புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர்களும் மற்றும் ஊழியர்களும் பாதுகாப்புகருதி அங்கிருந்து வெளியேறியுள்ளதால் வைத்தியசாலை இயங்காத நிலையிலுள்ளது.
இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர்களும், மற்றும் ஊழியர்களும்

[4-ம் பக்கம் பார்க்க]

# ராஜீவ் இந்தியப்பிரதமராவதை பிரேமதாசா விரும்பவில்லை!

## இலங்கை பிரச்னையில் தலையிடலாம் என்று அச்சம்

(பாரிஸ்)
**இந்தியாவின் அடுத்த பிரதமராக ராஜீவ்காந்தி வருவதை இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா விரும்பவில்லையென ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

இந்தியாவின் அடுத்த பிரதமராக யார் வரவேண்டுமென்பதில் பக்கத்து நாடுகள் மத்தியில் நிலவும் கருத்துதொடர்பாக ஏ. எவ். பி. செய்தி நிறுவனம் நடத்திய செய்தி விமர்சனத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்தியாவின் ஆட்சியை ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சியே பிடிக்கவேண்டும் என்று இலங்கை எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ராஜீவ் ஆட்சிக்கு வந்தால் இலங்கை விவகாரத்தில் தலையிடலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே ஜனாதிபதி பிரேமா இவ்வாறு ராஜீவ் ஆட்சிக்கு வருவதை விரும்பவில்லையாம்.

பாகிஸ்தானைப் பொறுத்தவரையில் இந்தியாவில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அக்கறையில்லை என்றும் பங்களாதேஷ் வி. பி. சிங்கும், நேபாளம் சந்திரசேகரும் பிரதமராக வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. (ரி)

## தேர்தல் பிரசாரம் இன்று நிறைவுபெறும்

[கொழும்பு]
உள்ளூராட்சிசபை தேர்தலுக்கானபிரசாரக் கூட்டங்கள் யாவும் இன்று நள்ளிரவுடன் முடிவுறுகிறது.
கட்சித்தலைவர்கள். சுயேச்சை வேட்பாளர்கள் யாவரும் சூறாவளிப் பிரசாரக் கூட்டங்களில் இறங்கியுள்ளனர்
நள்ளிரவுக்குப் பின்னர் கூட்டங்கள் நடத்தக்கூடாதெனப் பொலிஸ் பகுதியினர் உத்த

[4-ம் பக்கம் பார்க்க]

## இரு ஊர்காவலர்கள் கல்முனையில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)
கல்முனைப் பகுதியில் இரண்டு ஊர்காவற் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரே அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் அகதி முகாம்களில் உணவுத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)
மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் இரண்டு அகதிகள் முகாம்களிலும் தற்போது உணவுத்தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது
மன்னார் மாவட்டத்திலுள்ள மடு தேவாலயத்தில் 36 ஆயிரம் இடம்பெயர்ந்த அகதிக் குடும்பங்களையும், பேசாலையில் 16 ஆயிரம் இடம்பெயர்ந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து குண்டுவீச்சு!

[வவுனியா]
வவுனியாவைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் இலங்கை விமானப்படையினர் நேற்று முன்தினம் நாள் முழுவதும் இடைவிடாத குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டனர்.
வவுனியாவிலுள்ள பாலமோட்டை, கிழவிக்குளம், கோமியகுளம் ஆகிய பகுதிகளில் காலை 5-30மணிதொடக்கம் மாலை 6மணிவரை வை 12 விமானமும், அவ்ரோ விமானமும் இணைந்து 50க்கு மேற்பட்ட பீப்பாக்குண்டுகளையும், நேபாம் குண்டுகளையும்வீசின. இதேநேரம் இருபொம்மர் விமானங்கள் 40க்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளது.
இவற்றுடன் இரு ஹெலிகள் 50 ஹலிபர் தாக்குதல்களை

(4ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுப் பகுதியில் விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு இராணுவ முகாம் சுற்றாடலில் நேற்று முன்தினம் கடும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டன.
குண்டுவீச்சு விமானங்கள், அவ்ரோ விமானங்கள், ஹெலிகொப்டர்கள் போன்றன இணைந்து இப்பகுதியில் தாக்குதலை நடத்தின.
நேற்று முன்தினம் காலை 10-30 மணியிலிருந்து 11-30 மணிவரை இத்தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

## வெடிவிபத்தில் சிக்கிய போராளி வீரமரணம்

(திருமலை)
திருமலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்,
2-வதுலெப்டினன்ட் உத்தமன் (வேலாயுதம் புலேந்திரன், திருமலை) என்ற போராளியே இச்சம்பவத்தில் வீரமரணமடைந்தவராவார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ப. நோ. கூ. சங்கங்களுக்கு அமைதிப் படையினால் 4 கோடி ரூபா சேதம்

(யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்திலுள்ள ப நோ. கூ. சங்கங்களுக்கு 1987 அக்டோபர் முதல் 1990 பெப்ரவரி வரை இந்திய இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட சேதங்கள், இழப்புகள் மொத்தமாக 4 கோடி 25 இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
இதற்கான நஷ்டஈடு கோரி ஏற்கனவே கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இதற்கான நஷ்டஈடுகள் வழங்கப்பட்டுவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நோயாளரை பதியுமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]
கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதற்காக சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களையும், நோயாளர்களை அழைத்துச் செல்பவர்களையும் நாளை பிற்பகல் 2 மணிக்கும் நாளை மறுதினம் வெள்ளி காலை 10 மணிக்கும் தமது காரியாலயத்

(4-ம் பக்கம் பார்க்க)

## மூவாயிரம் ரூபாவிற்கு ஒரு பைந் இரத்தம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு அவசரமாக இரத்தம் ஏற்ற வேண்டி ஏற்படும் போது ஒருபைந் இரத்தத்தை 3000 ரூபா கொடுத்துப்பெற வேண்டிய அவலநிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
நோயாளர்களுக்கு இரத்தம் ஏற்றவேண்டுமென தெரிவிக்கப்பட்டதும் இரத்த தரகர்கள் தமது கைவரிசையைக் காட்டி, ஒரு பைந் இரத்தத்தை 3,000 ரூபாவுக்கு எடுத்துக்கொடுக்கின்றனராம். இதுபற்றி புகார்செய்யப்பட்டுள்ளன. (52)

# வரி விளம்பரம்

## தாதி பயிலுனர்

தாதிபயிலுனர் தேவை உடன் விண்ணப்பிக்கவும் டாக்டர் P சொர்ணலிங்கம் மூளாய் வீதி, வட்டுக் கோட்டை, (சி 4711)

## தவறிவிட்டது

திருநாவுக்கரசு - மோகன தாஸ் அவருடைய 683470368V இலக்கத்தையுடைய அடையாள அட்டை சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன்னால் தவறிவிட்டது. அதைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்திற்கு தயவு செய்து ஒப்படைக்கவும். விக்கினேஸ்வரன் ஜுவலர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி 4708]

## பரீட்சை (ஆண்டு-4)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் ஆண்டு 4 (புலமைப் பரிசிலுக்கான அடிப்படை பரீட்சை) முதலாவது 12-05-91 ஞாயிறு மு. ப. 8.00, பி. ப. 1 00மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. ஆண்டு 5 (இரண்டாவது பரீட்சை) 19-05-91 ஞாயிறு மு ப 8.00, மு.ப. 10 30 நடைபெறும் புதியகல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 4712)

## விற்பனைக்கு

அதிதீவிர சக்திகொண்ட மில்க்வைற் திரவ சவர்க்காரம் வீட்டுச் சலவைக்குப் போலவே வீட்டுத் தரை, மரத் தளபாடங்கள், வீட்டுப் பாத்திரங்கள், கண்ணாடிப்பொருட்கள் அழுக்கை அகற்றவும் உதவுகிறது. - மில்க்வைற், யாழ்ப்பாணம். [எ 1282]

## இரண்டு தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பண்டாரவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோவினரும் பதுங்கியிருந்து பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கடந்த 4ம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் இரண்டு பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்,

இதே தினத்தில் வாகரைச் சந்தியில் வைத்துத் தமிழ் இளைஞர் ஒருவரை இராணுவத்தினர் கைதுசெய்து, முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பண்டாரவெளியை சேர்ந்த தெய்வநாயகம் (வயது 20), கணபதிப்பிள்ளை (வயது 23) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். (க)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது) சுன்னாகம்

மேற்படி சங்கத்தினால் நடாத்தப்படும் அரிசி ஆலையில் இருக்கும் (நம்பர்) No - I Huller (அல்லர்) ஐ இயக்குவதற்கு 30 குதிரைச்சக்தி இயந்திரம் வைத்திருக்கும் சொந்தக்காரரிடமிருந்து கூலிக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை காரியாலய வேலைநாட்களில் பெற்று 15-05-91க்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்.

சுன்னாகம் பல நோ: கூ: சங்கம்.
06-05-91. (ஏ 1280)

# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI
# VACANCY

A Vacancy exists for a suitable person to be on the staff and take responsibility in the administration of the Institute.

**Qualification:**

An Engineering Degree from a recognised University preferably with a post graduate qualification and necessary experience in teaching & administration.

**Salary:** Negotiable

**Closing date:** On or before 31st May 1991.

Send your applications either to

THE REV. PRINCIPAL
Secretary (J. C. I. T. & A.)
Jaffna College, Vaddukoddai.

OR

THE SECRETARY
C/o C S I. Parsonage,
17, Francis Road,
Colombo-6.

SECRETARY,
J. C I T & A.

(A 1278)

## இராசி பலன்

08-05-1991
புதன்கிழமை

நவமி பி. ப. 4-24 வரை, அவிட்டம் காலை 7-00 மணி வரை, மரணயோகம், இராகு காலம் காலை 11-55 முதல் 1-25 வரை, சுபநேரம் மாலை 4-25 முதல் 5-55 வரை.

மேடம்: தொழில் சிறப்பு. புதிய விருந்தினர், குடும்ப சுகம்.

இடபம்: உல்லாச பயணம், வருவாய் அதிகரிப்பு, சுப நிகழ்ச்சி.

மிதுனம்: தொழில் பாதிப்பு, அலைச்சல் மிகுதி. அகால போஜனம்.

கடகம்: நோய் உபாதை,

[3 ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991-06 03ம் தேதிவரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப் படும்.

உயிரிரசாயனவியலில் விரிவுரையாளர்/உதவி விரிவுரையாளர்

குறிப்பு: உயிரிரசாயனவியலில்/உயிர் தொழில் நுட்பத்தில்பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 4500 - 10 x 200 ரூ. 6,500/- மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 4500 ரூபாவுக்குமேலே இரண்டு படி அதிகமாக அதாவது 4900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல்வேண்டும்.)

உதவி விரிவுரையாளர்:
ரூபா: 3,900/- மாதமொன்றுக்கு ஓராண்டுக்கு (நிலையானது)

இப்பல்கலைக் கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற 23x10 ச மீ. அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-05-03 (எ 1279)

## பீரங்கிப் படகுகளிலிருந்து குடிமனைகள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்பகுதியில் நிலைகொண்டிருக்கும் மூன்று பீரங்கிப் படகுகளிலிருந்து குடிமக்களை நோக்கி 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல்தாக்குதலும் நடத்தப்பட்டன.

வல்வெட்டித்துறை, தொண்டமனாறு ஆகிய இடங்களை நோக்கி கடந்த ஞாயிறு 10-15 மணிமுதல் 11-10 வரை இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பாலசுப்பிரமணியம் மகேந்திரராசா, தியாகராசா அருட்செல்வம் ஆகியோர் இச்சம்பவத்தில் காயமடைந்தனர். (51-க)

## வவுனியா மாவட்டத்தில் விமானக் குண்டு வீச்சு

[வவுனியா]

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்களைநோக்கி கடும் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டன.

இம்மாவட்டத்திலுள்ளபாலமோட்டை, கிளவிக்குளம், சோழியர பகுதி ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் அதிகாலை 5-30 மணி தொடக்கம் நண்பகல் 1-30 மணிவரை தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இரு குண்டுவீச்சு விமானங்கள், இரு ஹெலிகள், அவ்ரோ விமானங்கள் இணைந்து இத் தாக்குதலில் ஈடுபட்டன.

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. (க)

## விசேட கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட திரிசாரணருக்கான விசேட கூட்டம் நாளை 9ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

மேற்படி கூட்டத்தில் அகதிகள் பராமரிப்பு 75ம் ஆண்டு மலர்குழு தெரிவு சம்பந்தமாக ஆராயப்படவிருக்கிறது. [153]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### திரு. செ. விசாகப்பெருமான்

13-04-91இல் நயினாதீவில் சிவபதமடைந்த எமது குடும்பத்தின் மூத்ததலைவர் திரு. செ. விசாகப்பெருமான் அவர்களின் இறுதிக் கிரியைகளின் போது பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும், நேரடியாகவும், தபால்மூலமும் அனுதாபங்களை தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதோடு 13-05-91 திங்கட்கிழமை காலை நயினாதீவு தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும் அதன்பின்பு எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரண கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

''இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்''

- குடும்பத்தினர்

'புலவர் வளவு'
நயினாதீவு - 5. (சி 4713)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கணேஷ்

அல்வாய் மேற்கைச்சேர்ந்த சின்னத்தம்பி கணேஷ் 2-5-91ம் திகதி காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக்கணவரும் திருமதி ஜெ. சிவயோகமலர் (தேசிய வீடமைப்பு திணைக்களம், யாழ்ப்பாணம்) செல்வி செல்விமலர் (சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமராட்சி), இராஜதுரை (பனம்பொருள் அபிவிருத்திச் சபை), திருமதி சி. தவமலர் ஆகியோரின் அருமைத் தந்தையும், எஸ். ஜே. ஜெயக்குமார் (உள்ளகக் கணக்காய்வாளர், பனம்பொருள் அபிவிருத்திச்சபை), திருமதி இ. பத்மாவதி யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்), சு. சிவனேசன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புமாமனாரும், சு. கந்தசாமி (தபாலதிபர், அஞ்சல்திணைக்களம், வல்வெட்டித்துறை)யின் சிறிய தந்தையும், அருளம்பலம், திருமதி க நவமணி, திருமதி பா யோகேஸ்வரி, ஆகியோரின் மாமனாரும், காலம்றுதா, அலங்றுதா, அவனிபாஜனன், சவின்றுதா, தேஜோமயன், நேமிஷா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-5-91ம் திகதி திக்கம் இந்து மயானத்தில் நடைபெற்றது. உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கோருகின்றோம்.

தகவல்:-

எஸ். ஜே. ஜெயக்குமார்

'அமுதசுரபி'
2ம் கட்டையடி,
அல்வாய் மேற்கு. [சி-1281]

# ★ "எல்லா துறைகளிலும் பெண்கள் போட்டி போட்டு முன்னேற வழிவகுப்போம்"

— செல்வி ஜெயலலிதா

பாரதப் போரில் ஓர் பாஞ்சாலி சபதம் வென்றது போல் ஜனநாயகப் போரின் சபதம் இன்று வென்றுள்ளது இந்த வரலாற்று உண்மையை உலகிற்கு சொன்ன தேர்தல் தான் 1989 நவம்பர் திங்கள் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலாகும் அதேநேரத்தில் நடைபெற்ற சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலும் முதிர்ந்த அரசியல் தீர்வை தமிழ் மக்கள் தந்தனர்.

புரட்சித்தலைவர் எம் ஜி. ஆரின்பின் பிரிந்திருந்த சக்திகள் இணைந்தன. இதகண்டு கலங்கிய குழுவினர் என்னைச் சட்டமன்ற மண்டபத்தில் தாக்கமுற்பட்டனர், அந்த நிகழ்ச்சி நடைபெற்ற 1989 மார்ச் 15ல் தமிழக வரலாற்றில் கறுப்பு நாளாகியது.

(செல்வி ஜெயலலிதா (அ. தி. மு. க.) தேர்தல் பிரசாரம் தொடர்பாக வானொலியில் நிகழ்த்திய உரையின் சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.)

அ. தி. மு. க. வின் முற்போக்கான சில திட்டங்களை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

உங்கள் ஆதரவோடு அமையவுள்ள கழக ஆட்சி, தமிழகம் தன் தனித்தன்மையோடு தலைநிமிர்ந்து நிற்கும் ஆட்சியை உருவாக்க தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் மாநிலங்கள் வளர்ச்சியடைவதால் தான் நாடு வளர்ச்சியடையும்.

இதுவரை தீர்க்கப்படாத மத்திய மாநில பிரச்சனைகளும் மாநிலங்களுக்கிடையேயான பிரச்சனைகள் தீர்வுகாண கவனத்துடனும் சுமுகமான முறையிலும் அணுகப்படும்.

சட்டம் ஒழுங்கைப் பேணிப் பாதுகாப்பதில் தமிழகம் முதல் மாநிலம் என்பதை எடுத்துக்காட்டாக ஏற்படத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாநில காவல்துறை மக்களுக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் செயல்படும்.

புரட்சித்தலைவர் ஆட்சிக் காலம்வரை இருந்த 31 வீத பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 50 வீதமாக உயர்த்தி பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டு கொள்கையை இந்தியாவிலேயே அதிகவீதம் வழங்கும் மாநிலம் தமிழகம் தான் என்ற நிலையை பெறச் செய்து காட்டினார் எம். ஜி. ஆர். மத்திய அரசும் பின்தங்கிய மக்களுக்கு 50 சதவீத ஒதுக்கீட்டை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

முதல் அடிப்படையாக கல்வி நிலையில், பின்தங்கியோருக்கு ஒதுக்கி வழிசெய்யவேண்டும் எனக் குரல் கொடுப்போம்:

தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் வறுமைப் பிடியிலிருந்து விடுபடவும், பொருளாதாரக் கொள்கையில் மேம்படச் செய்யவும் நடவடிக்கை எடுப்போம்.

பெண்களை

இழிவுபடுத்தி பேசுவோர்

மற்றும் அவர்களை

பாதிக்கும் வகையில்

கேலி செய்வோர்

கிரிமினல்

குற்றவாளிகளாக

கருதப்பட்டு தண்டனைக்கு

ஆளாக்கப்படுவர்.

நாட்டின் எதிர்காலச் செல்வங்களாக விளங்கும் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டு சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தது புரட்சித்தலைவர் ஆட்சி. ஆனால் இடையில் 2 ஆண்டுகள் நடந்த கருணாநிதி ஆட்சியில் சத்துணவுத்திட்டம் சத்தில்லாத திட்டமாக்கப்பட்டது: அ. தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் குழந்தைகளின் சத்துணவுத் திட்டத்தில் காணப்படும் குறைகள் அனைத்தும் முதல்வேலையாக நீக்கப் படும்.

சமுதாயத்தில் பெண்கள் அடிமைகளாக கருதப்படும் நிலையுள்ளது. இந்த நிலையை ஒழிக்க சட்டத்தில் அனுமதிக்கும் சம உரிமைகளை அமுல் செய்வோம் பெண்களை கொடுமைப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படும். பெண்களை இழிவு படுத்தி பேசுவோர் மற்றும் அவர்களை பாதிக்கும் வகையில் கேலி செய்வோர் கிரிமினல் குற்றவாளிகளாக கருதப்பட்டு தண்டனைக்கு ஆளாக்கப்படுவர். கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மீது அரசு தனிக் கவனம் செலுத்தும்.

முதியோருக்கு இலவச வேட்டிசேலை, ஒருவேளை இலவச உணவு, ஒருவார இலவச அரிசி மாதாந்த உதவித் தொகை கிடைக்க எம். ஜி. ஆர். வழிசெய்திருந்தார். கருணாநிதி ஆட்சி இந்த உதவிகளை சிதைத்துவிட்டது. அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்ததும் முதியோர் நல்வாழ்வு திட்டத்தை முழுமையாக செயல்படுத்தும்.

பெண்களை கல்வி அறிவு பெறச்செய்து சொந்தக்காலில் நிற்க வழிசெய்வோம். பெண்களே தாங்கள் சம்பாதிக்கும் திறன்பெறுவது அவசியமாகும் அதற்கான புதிய திட்டங்களை ஏற்படுத்துவோம். பெண்களுக்கு இலவச கட்டாயக் கல்வி அளிப்பதன் மூலமும் தகுந்த தொழில் கல்வியும், பயிற்சியும் தருவதன் மூலமும் அவர்களை சமுதாயத்தில் மேலும் பயனுள்ளவர்களாக்குவோம். ஆண்களுடன் பெண்களும் சமமாக எல்லாத்துறைகளிலும் போட்டி போட்டு முன்னேறுவதற்கான வாய்ப்புகளும் வசதிகளுமளிப்போம்.

உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படும் மன்றங்களுக்கு அதிகாரம் கூடுதலாக வழங்கப்படும் மாநில அரசு தலையீடு பெருமளவு குறைக்கப்படும்.

தமிழரின் மேம்பாட்டுக்கு உழைத்து தாழ்ந்த தமிழகத்தை மீண்டும் தலைநிமிரச் செய்வோம்.

## தமிழ்நாடு தேர்தல் களம்

# ★ தமிழ்நாடு தேர்தலில் 4 கோடி மக்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்!

(சென்னை)

தமிழ்நாட்டில் 26ம் திகதி நடைபெறவுள்ள மக்களவை, மாநில சட்டசபை தேர்தலுக்கான பிரசாரங்கள் யாவும் 24ம் திகதி மாலை 5மணியுடன் நிறுத்தப்படும்.

கலைக்கப்பட்ட மக்களவையிலும், சட்டசபையிலும் உறுப்பினர்களாக இருந்த பலர் இம்முறையும் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலில் தமிழ்நாட்டில் 4கோடி பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

42, 961 வாக்களிப்பு நிலையங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்படவுள்ளன. 39மக்களவை தொகுதியில் 16 பெண்கள் போட்டியிடுகிறார்கள்.

சட்டசபைக்கு 101பெண்கள் போட்டியிடுகிறார்கள். இதில் அ. தி மு. க.வின் செல்வி ஜெயலலிதா உட்பட 27பெண்களும், தி.மு க.வில் 70 பெண்களும், காங்கிரஸ் சார்பில் 6 பெண்களும் போட்டியிடுகிறார்கள். தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி துறைமுகம் தொகுதியில் போட்டியிடுகிறார்.

தனக்கு தேர்தலில் இடம் ஒதுக்கீடு செய்யப்படாததால் சட்டப்பேரவை துணைத்தலைவர் தி. மு. க. விலிருந்து அ. தி. மு. க. வுக்கு மாறியுள்ளார். இதேவேளை கோமதி சீனிவாசன் அ.தி.மு.க விலிருந்து தி மு. க.வுக்கு கட்சி மாறியுள்ளார். (பூ)

அதிக எண்ணிக்கையில் பன்னிப்பட்டி தொகுதியில் 664 பேர் போட்டியிடுகின்றனர். இதில் 259பேர் சுயேட்சை வேட்பாளர்களாவார்.

இத்தொகுதியில் அதிக தெலுங்கு மக்கள் வசிப்பதால் தெலுங்கிலும், தமிழிலும் வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப் படுகிறது.

அடுத்தபடியாக மறவா குறிச்சி தொகுதியில் 249பேர் போட்டியிடுகிறார்கள் இதில் 245 பேர்சுயேட்சையினர்.

இவ்விரு தொகுதிகளிலும் அதிக எண்ணிக்கையானோர் போட்டியிடுவதால், விசேட வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. வாக்குச் சீட்டுகளும் தினசரி பத்திரிகை போல பெரிதாக இருக்கும்.

## இராசி பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பப்பிரிவு, காரியதாமதம்.

சிம்மம்: தொழில்மாற்றம், காரிய வெற்றி, குடும்ப மகிழ்ச்சி.

கன்னி; கௌரவக்குறைவு, பணவரவு, புதிய உறவு.

துலாம்: புத்திரர் கவலை. குடும்ப சச்சரவு. வெறுப்பு.

விருச்சிகம்: இனசனப் பகை, தொழில்கஷ்டம், மனச் சுமை.

தனுசு: வாக்கு வன்மை, வஸ்திர லாபம், காரியசித்தி

மகரம்: சகோதரர் பகை, வாக்குக்கலகம், வைத்தியச் செலவு.

கும்பம்: விருத்துபசாரம், தொழில் பாராட்டு, மன நிறைவு.

மீனம்; கருத்துமோதல், பகைவர் தொல்லை, யோசனை.

ஜோஸ்யர்

# கைதடியில் நடைபெற்ற உளவளர்ச்சி பாசறை!

எமது உளமானது உளவியல் ரீதியாக எப்படிப் பாதிப்படைகிறது என்பதனையும் இந்தப் பாதிப்புகளிலிருந்து எப்படி விடுபடுவது என்பது பற்றியதுமான ஒரு வழிகாட்டலைக் கைதடியில் அண்மையில் நடைபெற்ற 'உளவளர்ச்சிப் பாசறை' அதில் பங்குபற்றியவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

'நான்' உளவியல் சஞ்சிகையின் வழிகாட்டலின்கீழ் அறவழிப் போராட்டக்குழுவினால் நடத்தப்பட்ட இப்பயிற்சிப் பாசறை . கைதடி நவீல்ட் பாடசாலையில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இருநாட்கள் நடைபெற்றன.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்து ஐம்பதிற்கு அதிகமான இளைஞர்-யுவதிகள் இப்பாசறையில் கலந்து கொண்டனர்.

வண. பிதா வின்சென் பற்றிக் அடிகளார், வண. பிதா ஸ்ரனி அன்ரனி, செம்பியன் செல்வன், ஜோசப் பாலா ஆகியோர் இப்பயிற்சிப் பாசறையில் விரிவுரைகள், கள ஆய்வுகள் போன்றவற்றை நடத்தினார்கள்.

அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் கே. கோபால கிருஷ்ணன் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இப்பயிற்சிப் பாசறை பங்குபற்றுநர்கள் மத்தியில் விழிப்புணர்வையும், நல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதனைப் பாசறையின் இறுதிநாளில் உரைக்கூடியதாக இருந்தது.

உந்தலும், உணர்வும், இன்றைய சூழலில் நாம் எதிர் நோக்கும் உளவியல் தாக்கம், ஆள்மனச்சிதைவுகளும் அவற்றின் வெளிப்பாடுகளும் மகிழ்வான வாழ்விற்கு வழிகள் போன்ற தலைப்புகளில் நடத்தப்பட்ட விரிவுரைகள் மிகப்பயனுடையதாக அமைந்திருந்தது

அதிகரித்துவரும் நெருக்கடி நிலையினால் தப்பியோடும் எண்ணம் தவறானது. எதுவந்த போதும் இந்த மண்ணிலிருந்து எதிர்கொண்டு வாழ்பவனே உண்மையான மனிதன் என்பதனை இப்பயிற்சி விரிவுரைகளின்போது அழுத்தமாக உரைக்கப்பட்டது

முதல் நாள் இரவு நடைபெற்ற கலாசார நிகழ்ச்சிகளில் சமகாலப் பிரச்சனைகளை மையப்படுத்தி நாடகங்கள், பாடல்கள் போன்றவை நிகழ்த்தப்பட்டன.

இப்பயிற்சியைப் பெறச் சந்தர்ப்பம் வழங்கிய அறவழித் தொண்டர்ஜீவகதாஸின் பணி பாராட்டிற்குரியது.

—துரை.

## பண்பாடு காத்த மேலோன்-வித்தி

ஆங்கிலத்தில் மோகமுற்றே அருந்தமிழை விட்டு
அன்னியரின் அடிவருடிப் பண்பாடு கெட்டு
தீங்குபல செந்தமிழுக்குச் செயநினைத்த நேரம்
ஈழமக்கள் கலைபலவும் தேய்ந்தழிந்த காலம்

எம்மவரின் கலைகாக்கப் பண்பாடு காக்க
எழுந்தனன்வித் யானந்தன் என்னுமொரு
சான்றோன்
தன்நலமோர் சற்றுமின்றித் தமிழ்நலமே எண்ணி
தக்கவகை தேர்தெடுத்து தொண்டுபல
செய்தோன்

பல்லாண்டு காலமாய்ப்பல் கலைக்கழகம் தன்னில்
ஆசானாய் மாணவர்க்குக் கல்வியினை ஊட்டி
சொல்லரிய மேநிலையில் அவர்களினை வைத்தான்
நல்லறிவுச் சுடர்கொளுத்தி அவருளத்தைப்
பெற்றான்
கூத்துமுத லாந்தமிழர் கிராமியத்துக் கலைகள்
குன்றிமிகத் தாழ்வடைந்து நின்ற நிலை
கண்டான்
முத்தகலை ஞர்களுக்கும் முத்தமிழ்க்கும் தொண்டு
செய்துமிக முன்னேற்றிப் புகழுயர்த்தி
வைத்தான்

அனைத்துலக தமிழாய்வு மாநாட்டைக் கூட்ட
அஞ்சாமல் முயன்றேதான் அரும்பணிகள் செய்த
வினைத்திறனை வீரத்தை நேர்மையினைக் கண்டோம்
வெற்றிபெற்ற மாநாட்டில் அவன்தலைமை
கண்டோம்

சங்கத்து நூலாய்ந்து அக்காலம் வாழ்ந்த
தமிழர்தம் சால்பதனை நூலாக்கித் தந்தான்
எங்களின் பெரும்சொத்தாம் நாடகத்தை உயர்த்த
ஏற்றபல பெருஞ்செயல்கள் செயமுனைந்து
நின்றான்.

பா. மகாலிங்கசிவம்

(இன்று பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் 67-வது சிரார்த்த தினம்)

## வர்த்தகராக இருக்கும் கூ. சங்க தலைவர்களை ராஜினாமா செய்ய பணிப்பு

(கொழும்பு)

கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைகளின் தலைமைப் பதவிகளிலிருக்கும் சகல வர்த்தகர்களையும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யுமாறு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் விரசிங்க மல்லிமாராச்சி உத்தரவிட்டுள்ளார்.

நாட்டிலுள்ள 15 கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களாக இருப்பவர்கள் தனிப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே அமைச்சர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த வர்த்தகர்கள், தமது மனைவி, பிள்ளைகளின் பேரில் தனிப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளை நடத்திவந்துள்ளனர்.

சட்டப்படி கூட்டுறவுச் சேவையில் பதவிவகிப்போர், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவது குற்றமாகும்.

பொதுமக்களிடம் இருந்து பல முறைப்பாடுகள் கிடைத்ததைத் தொடர்ந்தே அமைச்சர் மேற்படி பணிப்பை விடுத்தார். (பூ)

## குடிதண்ணீர் வசதியின்றி மாணவர்கள் அவதி

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள சில பாடசாலைகளின் கிணறுகள் உவர் நீராக இருப்பதினால் தற்போது நிலவும் கடும்வரட்சியல் மாணவர்கள் வகுப்பு நேரங்களில் தண்ணீர் தாகத்தினால் பெரும் அவதிப்படுவதாக பெற்றோர் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆரம்பமாகியுள்ள கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்கள் போத்தல்களிலும், பிளாஸ்டிக் கான்களிலும் வீட்டிலிருந்து குடிதண்ணீர் கொண்டுசெல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. [வி]

## அலுவலகம் மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் இயங்கிவரும் நெற்சந்தைப்படுத்தும் சபை நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகம் வெகுவிரைவில் மூடப்படவிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நெற்சந்தைப்படுத்தும் சபை பிராந்திய முகாமையாளர் அலுவலகங்கள் ஏற்கனவே 4 இடங்களில் மூடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (153)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று ஸ்ரீலஸ்ரீ இலக்கண சுவாமிகள் குருபூசைத் தினமாகும்.

## குருபூசை விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கோத்தணியின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்களுக்கான விசேட கூட்டம் இன்று காலை 9-00மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறுமென பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு பி. சண்முகராசா தெரிவித்துள்ளார்.

## விவசாயிகளுக்குகடன்வழங்க மக்கள் வங்கி ஆலோசனை

(காங்கேசன்துறை)

வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவு முகமாகவும், உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கும் முகமாகவும் விவசாயிகளுக்கு விவசாயக் கடன்களை வழங்குவது குறித்து மக்கள் வங்கியினால் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளரால் யாழ்ப்பாணம் பிராந்தியப் பணிமனையில் கூட்டப்பட்ட கலந்துரையாடல் ஒன்றிலேயே இதுபற்றி ஆராயப்பட்டது.

யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்ட இக்கலந்துரையாடலில், மக்கள் வங்கியின் தலைமைப்பீடத்துடன் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்த ஆவனசெய்வதென முடிவுசெய்யப்பட்டது.

மேலும், நெருக்கடியான காலகட்டத்தில் நிதி வசதியின்றிக் கஷ்டமுறும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி ஆணைக்குழு அறவிட்ட தரகுப் பணத்தை 6 மாதங்களுக்காவது ரத்துச்செய்வது குறித்தும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இவ்விடயங்கள் குறித்து மக்கள் வங்கித் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதெனவும் முடிவுசெய்யப்பட்டது(66)

## அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட ப.நோ கூ. சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கூட்டம் இன்று புதன் கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நெற்கொள்வனவு, உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு சம்பந்தமாக ஆராயப்படவிருப்பதால் சகலரையும் தவறாது சமூகம் கொடுக்கும்படி யாழ். மாவட்ட கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்

## சுட்டுக்கொலை

[புதுடில்லி]

ஆந்திரப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர் நக்சலைட்டுகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். (பூ)

## இராணுவத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடியான எதிர்ப்பின் காரணமாக, இராணுவத்தினர் நிலை தளர்ந்து வருகின்றனர்.

இப்பகுதியில் முன்னேறும் இராணுவத்திற்கு உதவியாக விமானங்கள், ஹெலிகளிலிருந்து வான் தாக்குதல் நடத்தப்பட்டபோதும் பல இடங்களில் புதைத்துவைக்கப்பட்ட கண்ணிவெடிகள், மிதிவெடிகள் இராணுவமுன்னேற்றத்துக்கு தடையாக இருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார்

(ரி)

## சிறைக் கைதிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

குற்றப்பணம் செலுத்தாமல் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சிறைக்கைதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வந்துள்ளது.

குற்றப்பணம் செலுத்தமுடியாமல், சிறைத்தண்டனையை அனுபவித்து வரும் கைதிகளுக்கு வேலை செய்வதற்கு சந்தர்ப்பமளித்து அதில் அவர்கள் பெறும் பணத்தைக் கொண்டு அவர்களின் குற்றப்பணத்தை செலுத்தி தண்டனைக் காலத்தை குறைத்துக்கொள்வதற்கு அரசு மேற்படி திட்டத்தை அமுல் செய்துள்ளது.

முதற்கட்டமாக, இக்கைதிகளுக்கு விளையாட்டு அமைச்சு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வி)

## செம்பிறை தினம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை தினம் இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் அங்கத்தவர்களும், தொண்டர்களும் யாழ் போதனா வைத்தியசாலையிலும், பருத்தித்துறை வைத்தியசாலையிலும் இரத்த தானம் செய்யவுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பணிமனையில் கருத்தரங்கும், ஒளிப்படக் கண்காட்சியும் இன்று நடைபெறவுள்ளது. (வி)

## பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கத்தினரால் கிரிக்கட் மத்தியஸ்தர்களுக்கு நடாத்தப்படும் பயிற்சி வகுப்புக்கள் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறுமென சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## வெடிவிபத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

## கொழும்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சகல ஆவணங்களுடன் வந்து தொடர்பு கொள்ளும்படி யாழ். போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி புவிபா சண்முகம் தெரிவித்துள்ளார்.

பதிவுசெய்ய வரும்போது நோயாளர்களும் சமுகமளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார் [56]

## கிணற்றில் விழுந்த சிறுமி

[யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் குடும்பத்தினருடன் தங்கியுள்ள 9 வயதுச் சிறுமி ஆழமான கிணற்றில் விழுந்து தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

ஒரு அடி ஆழத் தண்ணீருள்ள கிணற்றில் நேற்று பிற்பகல் குளித்துக்கொண்டிருக்கையில் தலைகுப்புற கிணற்றில் விழுந்தபோதும் எதுவித காயமுமின்றி தப்பிக்கொண்டார்.

இச்சம்பவம் ஈச்சமோட்டை வீதியிலுள்ள ஒருவீட்டில் நடைபெற்றது. [வி]

## டாக்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளரின் அனுமதி பெற்று தத்தமது சொந்த இடங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர். [72]

## உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் ஞாயிறு அதிகாலை வெளியாகும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில், எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலைக்கு முன்னரே வெளியிடப்படுமென்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி தேர்தல் முடிவுகள் சனிக்கிழமை நள்ளிரவு 12-00 மணி முதல் தொலைக்காட்சி மூலமும், வானொலி மூலமும் வெளியிடப்படுமென்றும் சகல முடிவுகளும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலைக்கு முன்பே வெளியாகிவிடுமென்றும் அவர் கூறினார். (வி)

## தபால் மூலம் நடைபெறும் வாக்குகளை எண்ணும் வேலை சனி மாலை நடைபெறும்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தவிர மற்றைய மாகாணங்களில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலுக்கு தபால் மூலம் வாக்குகளை எண்ணும் வேலை சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இவ்வாறு இலங்கை தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டிசில்வா தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ணும் வேலைகள் மூன்று கட்டங்களாக நடைபெறும்.

முதலாவதாக ஒரு வாக்குப் பெட்டியில் எத்தனை வாக்குச் சீட்டுகள் இருக்கின்றன என எண்ணப்படும்.

2-வதாக ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை வாக்குகள் கிடைத்துள்ளன என கணிக்கப்படும்.

3-வதாக சுயவிருப்பத்தின் பேரில் எத்தனை வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன என்று எண்ணப்படும் அனைத்து முடிவுகளும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலைக்கு முன்பு வெளியிடப்பட்டுவிடும் என்று கூறினார். [வி]

## ப. நோ. கூ.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொடுப்பனவுகளை வெகுவிரைவில் துரிதப்படுத்தி வழங்குமாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரை வடக்கு கிழக்கு மாகாண சபை உணவு வர்த்தகத்துறை அமைச்சுச் செயலாளர் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## மன்னார்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அகதிக்குடும்பங்களையும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் நிர்வகித்துவருகிறது.

கடந்தமாதம் 27ந் திகதி வவுனியா தாண்டிக்குளத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து மேற்படி இருமுகாம்களுக்கும் அனுராதபுரத்திலிருந்து லொறிகள் மூலம் உணவுப் பொருட்கள் கொண்டுவருவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இந்த உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (158)

## ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டது.

ஹெலியிலிருந்து 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகமும், விமானங்களிலிருந்து பயங்கரக் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டன. (வி)

## வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும், 5 அங்குல மோட்டார் ஷெல் தாக்குதலையும் இடைவிடாது நடாத்திய வண்ணம் இருந்தன

இவற்றுடன்சேர்ந்து மாமடு இராணுவ முகாமிலிருந்து மேற்படி பகுதிகளை நோக்கி பலத்த ஆட்லரி ஷெல் தாக்குதலும் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. (வி)

## தேர்தல்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

சவு பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, தேர்தலைக் குழப்பச் சில குழுக்கள் முயல்வதாகவும், இதைத் தடுக்க கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். [பூ]

## வேப்பங்குளத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுமுன்தினம் இப்பகுதிக்குச் சென்ற விடுதலைப்புலிகள் பலத்த தேடுதல் வேட்டையை நடத்தினார்கள். இத்தேடுதலின் போது பின்வரும் ஆயுதங்கள் புலிகளால் மீட்கப்பட்டன.

எப். என் ஸி-3, அதற்குரிய ரவைகள்-3, ஆர் பி ஜி ஷெல் 6, அதற்குரிய பிறப்பிளர் 5, 48 மில்லி மீற்றர் ஷெல்-1, ஜே ஆர் கைக்குண்டு-6, 5 56 ரவைக்கோர்வைகள்-1445, 5 56 ரவைகள்-2255.

இவற்றுடன் சிதைந்த நிலையிலுள்ள ஒரு இராணுவத்தின் உடலையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். (வி)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 6ல் உள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office
Lankanada License number B/196906/31.